**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 41/2023**

**Deposition of P.W.** 6

Name : திரு. ரவீந்திரன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:01.07.2026

**Accused** Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் தமிழ்நாடு காவல்துறையில் காவல் ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது மதுரை திருப்பாலையில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது திருவட்டார் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திருமதி. மேரிஅனிதா என்பவர் ஆபிரகாம் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மை படி நிலைய குற்ற எண். 12/2018 பிரிவுகள் 341, 294(பி), 307, 324, 506(2) இ.த.ச மற்றும் பிரிவு 3(1) தமிழ்நாடு பொதுசொத்துக்களை சேதப்படுத்துவதை தடை செய்யும் சட்ட படி பதிவு செய்யப்பட்ட வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். புகார் மனு அ.சா.ஆ.3. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4. சம்பவ இடம் சென்று சாட்சிகள் அனு, அலெக்சாண்டர் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பின்பு சாட்சிகள் ஆபிரகாம், பிரின்ஸ், மெல்பின், வினேஷ், அனு, ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 12.01.2018ம் தேதி மதியம் 01.00 மணிக்கு 1வது எதிரியை கைது செய்து விசாரிக்க அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள்

முன்னிலையில் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வெட்டுக்கத்தி, ஆக்கத்தி, இரும்பு கம்பி ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினேன். அத்தாட்சி அ.சா.ஆ.5. படிவம் 95 – அ.சா.ஆ.6. எதிரிகளையும், வழக்குச் சொத்தையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு வழக்கு பதிவு செய்த சார்பு ஆய்வாளர், மருத்துவர் திருமதி. பழனி கீர்த்திகா, ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

பொய்யான புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.